உ

சிவமயம்

# நயினார்கோயில்

என்றுவழங்கிவருகிற

# மருதூர்

# நாகநாதசுவாமிபதிகம்

திரு கனகசபைமுதலியாரவர்கள்

வேண்டுகோளின்படி

இராமநாதபுரம் ஸமஸ்தான வித்துவான்

க சுப்பிரமணியபாரதி

இயற்றியது

—*—

இராமநாதபுரம்

முத்துக்கருப்பபிள்ளை யவர்களது

லெட்சுமிவிலாச அச்சுக்கூடத்தில்

பதிக்கலாயிற்று

1886௵

சிவமயம்

190

கணபதிதுணை

# நாகநாதசுவாமிபதிகம்

## விநாயகர்துதி

### வெண்பா

மாவார் திருமருதூர் வாழ்நாக நாதருக்கென்
பாவா ளுளங்கனியப் பண்ணுவான்---பூவாரு
மண்டுவண்டுமொண்டுண்மதம்பொழிகைம்மாமுகன்மெய்த்
தொண்டுகண்டு கொண்டுமகிழ்ந்து ........................*

## நூல்.

### எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

சீர்தரு நினதைந் தெழுத்தைநா வியம்புஞ்
    செயன்மருந் தாகவெப்பிணியுந்
தீர்தர வுளங்கொண் டுனதடி யவர்தஞ்
    சிந்தனை தீர்த்தருள் புரிவாய்
ஏர்தரு நதியு மதியமும் புதிய
    விதழியு மிலகுபூங் குஞ்சி
வார்தரு நாக நாதனே மருத
    வனத்துமென் மனத்துமா ரமுதே.....................(க)

அடியவர் தருவெண் பொடியைநன் னுதலி
  லணிவது மணிமரு மருந்தாக்
கொடியவெம் பிணிதீர்த் தடிமைக ளானோர்
  குடிமுழு தாண்டருள் புரிவாய்
படிநனி புரக்க வருமழ கியமின்
  பதியெனப் புதுமணக் கோல
வடிவுகொ ணாக நாதனே மருத
  வனத்துமென் மனத்துமா ரமுதே....................(௨)

புகழ்ந்து நாடொறுநின் திருவடிக் கன்பு
  பூண்டவர் பொன்னடிக் கமலந்
திகழ்ந்தெழு பொடிமா மருந்தினி துதவிச்
  சிறியோம் பிணிதவிர்த் தருள்வாய்
அகழ்ந்திடு கடல்சூ ழுலகெலாந் தழைக்க
  வழகிய மின்னிடங் கலந்து
மகிழ்ந்திடு நாக நாதனே மருத
  வனத்துமென் மனத்துமா ரமுதே....................(௩)

ஊழ்வழி வருமெய்ப் பிணியுநின் னடி
  முனைப்பவ ரிடத்துறு தெனநீர்
சூழ்வரு முலக மியம்புமா லடியேந்
  துனிதவிர்த் தினிதருள் புரிவாய்
தாழ்வற வுனது திருவடி நினைவார்
  தமக்கிக பரத்துவேண் டியநல்
வாழ்வரு ணாக நாதனே மருத
  வனத்துமென் மனத்துமா ரமுதே....................(௪)

பன்னிய மறைக ளன்றி யுளவற்றைப்
பயந்திடு மாதிமா மறவுட்
டுன்னிய நினது நாமமே மருந்தாச்
சொல்லுவோர்க் கல்லறீர்த் தருள்வாய்
மின்னிய முகில்வந் துலவவான் சினைகள்
விரிதரு கூவிள நிழலின்
மன்னிய நாகநாத னே மருத
வனத்துமென் மனத்துமா ரமுதே.....................(ரு

புதியநன் மலர்கொண் டிருகழல் பரவும்
புனிதருக் கினிதருள் கருணை
நிதியென வுனைநான் மறையு மேத்திடுமால்
நினதடி யனைப்புரந் தருள்வாய்
நதியொடு முடியிற் றண்கதிர் பரப்பி
நகைநில வுமிழ்தரும்பிள்ளை
மதிபுனை நாக நாதனே மருத
வனத்துமென் மனத்துமா ரமுதே..............................(சு)

இருந்துமா மறையின் சிரத்தினி லுரைத்த
தெய்வநீ யென்பது தெளிய
வருந்துநின் னடியார் துயர்களைந் தேனோர்
மயக்கமுந் தீர்த்தருள் புரிவாய்
பரிந்துவென் டியவ ருடற்பிணி தனக்கும்
பவப்பிணி தனக்குமைந் தெழுத்தா
மருந்தரு ணாக நாதனே மருத
வனத்துமென் மனத்துமா ரமுதே ........................(எ)

நிரந்தர முனது சரணபங் கயத்து
நிழல்பெற விழைபவர் தமக்குன்
சுரந்தரல் லருளாற் பிணிகளைந் தினிய
சுகந்தர வுளங்கனிந் திடுவாய்
புரந்தரன் முதலா மமரரு நாரும்
போற்றிநின் றன்பொடு கேட்கும்
வரந்தரு நாக நாதனே மருத
வனத்துமென் மனத்துமா ரமுதே....

அருமறை பரவு நினதுதா ணினைவ
தாகிய லேகிய மதனால்
வெருவுறு பிணிதீர்த் தடியவர் தமக்கு
மிகுசுக போகமீந் தருள்வாய்
பொருவரு முருவிற் பொலியழ கியமின்
போந்தெழி லேந்தொரு பாக
மருவிய நாக நாதனே மருத
வனத்துமென் மனத்துமா ரமுதே........

இந்திர னயன்மான் முதலியோர் துயர்தீர்த்
தின்பநீ முன்பரு ளியதுன்
கந்தர முனைக்கு மாதலா லெமக்குங்
கவல்பிணி தீர்த்தருள் புரிவாய்
சுந்தர சரண பங்கய மிதயஞ்
சுமப்பவர் தமக்குமுன் விடைமேல்
வந்தரு ளாக நாதனே மருத
வனத்துமென் மனத்துமா ரமுதே............

முற்றிற்று